# நாவிதன்வெளி பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 யூன் 22 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2011 டிசெம்பர் 21 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, நாவிதன்வெளி பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கத்தைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நாவிதன்வெளி பிரதேச சபையின் நடவடிக்கைகள் தொடர்பான நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினது நிதிசார் விளைவுகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டள்ளன வென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிசார் கூற்றுக்கள் சேர்ந்து நின்ற அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்தக்களுக்கான மாற்றீட்டுக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) பண்டங்கள், சேவைகள் வரியான ரூபா 899,420 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது திருப்பிச் செலுத்தப்படாத வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபையின் காலாவதியான வைப்புக் கணக்கில் வருவாயில் செலவு வைக்கப்படாது ரூபா 112,790 தேங்கியிருந்தது.

### 1.3.3 இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 | |
| விதி 180 | காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்யவில்லை |

| | |
|---|---|
| விதி 217 | பீஎஸ் 46க்கமைய சபையினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை |
| விதி 218 | காணியும் கட்டிடங்களும் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் சரி, பிழை பார்க்கப்படவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

| | |
|---|---|
| நி.பி 396 | காசாக மாற்றப்படாத ரூபா 500 பெறுமதியான பத்துக் காசோலைகள் சபையின் வருவாயில் செலவு வைக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 5,984,613 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,482,659 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 5 | - | - |
| (ii) | குத்தகை வாடகை | 1,435 | 1.239 | 3,349 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 165 | 126 | 3 |
| (iv) | ஏனைய வருவாய் | 400 | 893 | - |

**2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்**

சம்மாந்துறை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தால் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டு மாகாண வருவாய் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 86,500 நீதிமன்றத் தண்டப் பணமானது அறவிடப்படாதிருந்தது.

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் கணிப்பிடப்பட்டு கணக்கிலிடப்படவில்லை.

**2.2.4 வருவாய்க் கடன்பட்டோர்**

வருவாய்க் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 2,288,105 அறவீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை.

**2.2.5** நிதியாண்டின்போது நில அளவைத் திணைக்களத்தால் பெறப்பட்ட ரூபா 15,055 இற்றை வரை தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

**2.3 செலவின அமைப்பு**

மீளாய்வாண்டிற்கான சபையின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் என்பனவும் வேறுபாடுகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 6,261 | 7,097 | (836) |
| ஏனையவை | 2,481 | 8,668 | (6,187) |
| உபமொத்தம் | 8,742 | 15,765 | (7,023) |
| மூலதனச் செலவினம் | 5,050 | 7,342 | (2,292) |
| நிகர மொத்தம் | 13,792 | 23,107 | (9,315) |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கிகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு.

| பதவியின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்றுநர் | 01 | - |
| உதவு தரத்தினர் | 08 | 12 |
| ஆரம்ப தரத்தினர் | 10 | 09 |
| ஏனையோர் | - | - |
| | 19 | 21 |

## 2.5 சொத்து முகாமைத்துவம்

(அ) 2009 ஜனவரி 02 ஆந் திகதியன்று சபையின் பிரதித் தலைவருக்கு வழங்கப்பட்ட மொட்டோ பம்ப் லிபான் (802 பீஓ-4-80) இதுவரை திருப்பிச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் தற்போதைய பெறுமதி ரூபா 67,500 ஆகும்

(ஆ) 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகள் ரூபா 352,015 ஆகும். மொத்த மீதியும் ஓராண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 2,033,090 ஆகும். 2 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக உள்ள மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 38,584 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு

(இ) வருவாய் நிர்வாகம்